# சலேத் மாதா (1846)

14.09.1846 பிற்பகல் மூன்று மணிக்கு பிரான்சிஸ் நாட்டிலுள்ள லாசலேத் என்னுமிடத்தில் அருகே உள்ள மலையில் தேவதாய் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்த இரு சிறுவர்களுக்கு காட்சி கொடுத்தார்கள். இது நடந்தது, லூர்து காட்சிகளுக்கு 12 ஆண்டுகளுக்கு முன், தன் மக்களை எச்சரிக்கும்படி கடவுளின் அன்னை வந்தாள். “மக்கள் தங்களை திருத்திக் கொள்ள வேண்டும். ஞாயிற்றுக்கிழமைகளில் வேலை செய்யக் கூடாது. அன்று திருப்பலி காணவேண்டும். இயேசுவின் பெயரைச் சொல்லி ஆணையிடக்கூடாது. மக்கள் தங்களைத் திருத்திக் கொள்ளாவிட்டால் ஐரோப்பாவில் கடவுள் கடுமையாகத் தண்டிப்பார்” என்றும், அன்னை கூறினாள். “நெடுங்காலமாக நான் உங்களுக்காக என் மகனை இடைவிடாது மன்றாடி வேண்டி வருகிறேன். திருந்தாவிடில் அவர் உங்களை கைவிட்டு விடுவார்” என்று அன்னை கூறினாள்.

தேவதாய் விசனத்துடன் இருந்தாள், “காலையிலும், மாலையிலும் கர்த்தர் கற்பித்த மன்றாட்டும், மங்கள வார்த்தை மன்றாட்டும் சொல்லுங்கள். நான் சொன்ன செய்திகளை மக்கள் அனைவருக்கும் அறிவியுங்கள்” என்று தேவதாய் சொன்னாள். சிறுவர்கள் ஒவ்வொருவரிடமும் ஒரு இரகசியத்தை அன்னை தெரிவித்தாள். அதை அவர்கள் 9-ஆம் பத்திநாதர் பாப்புவிடம் 1851-ஆம் ஆண்டில் தொவித்தார்கள். அதைக் கேட்ட பாப்பு “மக்கள் மனந்திரும்பாவிட்டால் உலகம் அழிந்து போகும்” என்று விசனத்துடன் கூறினாள்.

வெகு சிலரே அன்னையின் எச்சரிக்கையை பொருட்படுத்தினர். 1847-ஆம் ஆண்டில் உருளைக்கிழங்கு, கோதுமை மற்றும் பல பொருட்களுக்கு பஞ்சம் உண்டாயிற்று. 10 லட்சம் மக்களுக்கு மேல் ஐரோப்பாவில் மடிந்தனர். திராட்சைச் செடிகளுக்கும் கொடிய நோய் வந்தது.

காட்சி கண்ட இரு சிறுவர்களையும் திருச்சபையின் அதிகாரிகள் நுணுநுணுக்கமாக விசாரித்தார்கள். சிறுவர்கள், சொன்னது உண்மையே என்று திருச்சபை அங்கீகரித்திருக்கிறது. திருயாத்திரியர்கள் தங்க வசதிகள் உண்டு. அநேக நோயாளிகள் இத்திருத்தலத்தின் சுகம் பெற்றிருந்தார்கள். பல வரங்களையும் பெற்று வருகிறார்கள்.

**சிந்தனை:**

சலேத் அன்னை சொன்ன புத்திமதிகள் இக்காலத்திற்கும் பொருந்தும். மனிதர்களது பாவங்களை முன்னிட்டு உலகைக் கடவுள் கடுமையாகத் தண்டிக்கிறார். அன்னையுடன் சேர்ந்து நாசமும் உலகத்தைக் காப்பாற்ற முயலுவோம்.

**செபம்:**

பாவமில்லாமல் உற்பவித்த மரியாயே, நிர்ப்பாக்கிய உலகத்திற்காக இயேசுவை மன்றாடும்.